A

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## ஒன்பதாம் வகுப்பு

நேரம் : 2.30 மணி தமிழ் மதிப்பெண்கள் : 100

பகுதி -I

15×1=15

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-

1) தமிழ்விடு தூது ________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) மேலே இ) இசை ஈ) புலரி

3) மல்லல் மூதூர் வயவேந்தே - என்பதில் மல்லல் என்பதன் பொருள்

அ) வண்டு ஆ) வளம் இ) பொய்கை ஈ) குற்றம்

4) சாரதா சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ) 1929 ஆ) 1964 இ) 1930 ஈ) 1997

5) மர வேர் என்பது ________ புணர்ச்சி

அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

6) ஐம்பெருங்குழு எண் பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

7) தீரா இடும்பைத் தருவது எது?

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்

இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

8) பொருத்தமான விடையைத் தேர்க

அ) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்

ஆ) நீரின்றி அமையாது யாக்கை - ஔவையார்

இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்

க) அ, இ உ) ஆ, இ ங) அ, ஆ ச) அ, ஆ, இ

9) பாரதிதாசன் எந்த நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

அ) பாண்டியன்பரிசு ஆ) அழகின்சிரிப்பு இ) இருண்டவீடு ஈ) பிசிராந்தையார்

10) இராவண காவியம் பாடல்களைக் கொண்டது

அ) 3100 ஆ) 3110 இ) 3000 ஈ) 1330

11) அழியா வனப்பு, ஒழியா வனப்பு, அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

பாடலைப்படித்து பின்வரும் (12, 13, 14, 15) வினாக்களுக்கு விடை தருக.

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும், உயிரும் படைத்திசினோரே

12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ________
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) குறுந்தொகை ஈ) ஐங்குறுநூறு

13) இப்பாடலின் ஆசிரியர் ________
அ) குடபுலவியனார் ஆ) தொல்காப்பியர் இ) நக்கண்ணையார் ஈ) நப்பசலையார்

14) நீரும் நிலமும் இலக்கணக்குறிப்பு தருக.
அ) வினைத்தொகை ஆ) எண்ணும்மை இ) முற்றும்மை ஈ) பண்புத்தொகை

15) இப்பாடலில் உள்ள 'யாக்கை'க்குப் பொருள் தருக.

## பகுதி -II

### பிரிவு -1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 4×2=8

16) 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?

17) விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) இளைஞர்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதையும் தேவை
ஆ) 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது

18) வீணையோடு வந்தாள். கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

19) செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.

20) ஏறு தழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

21) "எனைத்தானும்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு -2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 5×2=10

22) சொற்களைத் தொடராக மாற்றுக:-
அ) மொழிபெயர் (தன்வினை) ஆ) பயன்படுத்து (பிறவினை)

23) மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) மேடும் பள்ளம் ஆ) கண்ணும் கருத்தும்

24) பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) பரப்புமின்

25) கலைச்சொற்களை எழுதுக.
அ) Lexicon ஆ) Download

26) பொருள் தருக. அ) கான் ஆ) புரிசை

27) பிழைநீக்கி எழுதுக.
அ) குழலியும் பாடத் தெரியும்
ஆ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்

28) வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.

## பகுதி III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்:- 2×3=6

29) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குட புலவியனார் கூறும் வழிகள் யாவை?

30) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில் தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற

CamScanner

A



அறப்போர் முறையை தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜுன் 26 ஆம் நாள் சென்னை ஆயிரம் விளக்கு வட்டம் "சால்வன் குப்பம்" என்னும் பகுதியில் ம.பொ.சிவஞானம் பிறந்தார்.

வினா:-

1) காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தை எங்கு தொடங்கி வைத்தார்?

2) வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தொடங்கிய நிறுவனம் எது?

3) ம.பொ.சிவஞானம் பிறந்த ஊர் எது?

31) ஏறு தழுவுதல், திணை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

## பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்கவும்:-
(வினா எண்.34க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) 2×3=6

32) சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?

33) ஆண்டாளின் கனவுக் காட்சியை எழுதுக.

34) அடிபிறழாமல் எழுதுக.
"காடெல்லாம்" எனத் தொடங்கும் பெரியபுராண பாடல். (அல்லது)
"பூவாது காய்க்கும்" எனத் தொடங்கும் சிறுபஞ்சமூல பாடலை அடிமாறாமல் எழுதுக.

## பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமாக விடையளிக்க:- 2×3=6

35) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக்.

36) வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) தன்வினை பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

## பகுதி -IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:- 5×5=25

38) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

அடுத்த தலைமுறைக்குத் தண்ணீர் தேவை அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

39) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக. (அல்லது)

உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

40) முழு உருவச் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?


(அல்லது)

மொழிபெயர்க்க.

அ) Walk like a bull
ஆ) Love your food
இ) Thinking is great
ஈ) Union is strength
உ) Strengthen the body

CamScanner

41) காட்சியைக் கண்டு கவினுறக் கவிதை எழுதுக.



(அல்லது)

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ், ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

42) ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக.

அ) எனக்கு ______ பங்கு பிரித்துக் கொடுக்கவா! கீழே ஈரம் பார்த்து உன் ______ஐ வை

ஆ) கைப்பொருளைக் கடல் ______ யில் தொலைத்து விட்டு கரையில் தேடி ______ந்தால் கிடைக்குமா?

இ) தமிழ் எண்களை எழுதுக.

120, 534, 99

கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க. வா

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. அவன் | | | |
| 2. அவர் | | | |
| 3. அது | | | |
| 4. நான் | | | |
| 5. நீங்கள் | | | |

பகுதி -V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3×8=24

43) நயம் பாராட்டுக.

விரிகின்ற நெடுவானில் கடற்பரப்பின் விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில், பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில், புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில் தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில் தெவிட்டாத நுண்பாட்டே தூய்மை ஊற்றே. அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள் அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

ம.இலெ.தங்கப்பா

(அல்லது)

தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

44) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க. (அல்லது)

பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை எழுதுக.

45) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க. (அல்லது)

பருவமழையால் சேதமடைந்த சாலைகளைச் செப்பனிட்டுத் தரக்கோரி நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

*********

CS CamScanner